தாம்பரம் நகர கழகத்தின் மூத்த முன்னோடியும், முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் பழைய 10வது வட்ட செயலாளருமான பி.பாரதி அவர்கள் இயற்கை எய்திய தகவலறிந்து அன்னாரின் உடலுக்கு கழக பொருளாளர் பாராளுமன்ற கழக குழு தலைவர் டி. ஆர். பாலு அவர்கள் வணங்கி மலர்வளையம் வைத்து இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டார். உடன் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இளையான்குடி, மானாமதுரையில்

## 'நீட்' எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்!

### தமிழரசி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சிவகங்கை. நவ. 26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் ஏற்பாட்டின் பேரில் இளையான்குடியில் டாக்டர்ஜாகிர்உசேன்கல்லூரி முன்பாகவும், மானாமதுரையில் அனுசுயாதிருமண மண்டபத்திலும் நீட்தேர்வு எதிர்ப்பு ஆன்லைன்கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. முதல் கையெழுத் திட்டு திருமதிதமிழரசிரவிக்குமார் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள்எம்.எல்.ஏக்கள்சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் காவெங்கட் ராமன், வே.தமிழ்மாறன்,ஆறு.செல்வராசன்,எம்.அண்ணா துரை, துரை.ராஜாமணி, இளையான்குடி பேரூராட்சிமன்றதலைவர்பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலை வர் இப்ராஹிம்,மானாமதுரைஒன்றியகுழுதலைவர்திருமதிலதாஅண்ணாதுரை,துணைத்தலைவர் முத்துசாமி, மானாமதுரை நகர மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர், மற்றும் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ரவிச்சந்திரன், பாஸ்கரன், முத்துச்சாமி, மாவட்ட மகளிர் தொண்டர்அணி துணை அமைப்பாளர் நஸ்ரின்பேகம், மாவட்ட இளைஞர் அணி துணைஅமைப்பாளர்கார்த்தி, கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், முருகேசன் சௌந்தர், கனி, சிவமணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கண்ணன், விவசாய அணி பா.காளிமுத்து, வே. கருணாகரன் உள்பட கல்லூரி பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கையெழுத் திட்டார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு118, கௌடியா மடம் சாலை, அம்மையப்பன் சந்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை நேற்று (25.11.2023) தொடங்கி வைத்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி, துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி.யு. மல்லிகா, மண்டல அலுவலர் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் டேன்டீ தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு நாள் ஊதியம் ரூ.375/ஐ , 438 ரூ/ ஆக உயர்த்திய தோடு, 20% பண்டிகை கால போனசையும் அறிவித்து தொழிலாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு குன்னூரில் டேன்டீ ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் (LPF) சார்பில் நடத்தப்பட்ட நன்றியறிவிப்பு கூட்டத்தில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் இராசா, சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், வனத்துறை அமைச்சர் எம்.மதிவேந்தன், நீலகிரி மாவட்ட கழகச செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

இளைஞரணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் நல உதவிகள்!

### மாவட்ட இளைஞரணி கூட்டத்தில் முடிவு: அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

குன்றத்தூர், நவ.26

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி பகுதி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் செயற்குழுக் கூட்டம் அடையாரில் உள்ள மாவட்ட அலுவகத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் முனைவர் எல்.பிரபு ஆகியோர் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்கள்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ப.ராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கு.கலாநிதிகுணாளன், ஏ.விக்கி, எஸ்.ஜெகதீப், டி.ஜெகன், வே.சங்கீதா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு, துணை அமைப்பாளர்கள் பிரபு, வே.சிவசுப்பிரமணியம், இன்சமாம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய - நகர பகுதி பேரூர் இளைஞர் அணி - மாணவர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

"இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர்" கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் பெருமை மிக்க இளைஞர் அணியின் செயலாளராக பொறுப்பேற்று, இளைஞர் அணியை மேலும் வலுப்படுத்துவதற்காக தன்னையே அர்ப்பணித்து கொண்டு அயராது உழைத்து, அதிக அளவில் இளைஞர்களை உறுப்பினர்களாக சேர்த்து, இளைஞர்களை வழி நடத்தும் இளம் தலைவர்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 45வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கழகத்தினரும், இளைஞர் அணி மாணவர் அணியினரும் நவம்பர் 27ஆம் தேதி முதல் டிசம்பர் 27ஆம் தேதி வரை, நம்முடைய மாவட்டத்தில் உள்ள

40க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு உணவு உடைகளை வழங்கும் நிகழ்ச்சி,

மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ முகாம் இரத்ததான முகாம், கண் சிகிச்சை முகாம்களை நடத்தும் நிகழ்ச்சி, இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில்,

மாரத்தான் ஓட்டம், கிரிக்கெட், இறகு பந்து, கால் பந்து, கைப்பந்து, சிறகு பந்து, கபடி உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் ஏழை எளியவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் மிகவும் கோலாகலமான முறையில் எழுச்சியுடன் நடத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி மாணவர் அணி ஒருமனதாக முடிவெடுக்கிறது.

வருகிற டிசம்பர் மாதம், 17ஆம் தேதி, சேலத்தில் கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் வருங்காலத்திற்கு வழிக்காட்டும் வசந்த மலராய் திகழும் நம் நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் 10,000க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு இம்மாநாட்டை பிரமாண்ட மான மாநாடாக வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி ஏகமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளனர்.

நெய்வேலி சட்டமன்ற தொகுதியில்

# கலைஞர் மண்டல இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணிக்கு வரவேற்பு!

### அமைச்சர் சி.வெ.கணேசன் வாழ்த்துரை! சபா.இராசேந்திரன்,எம்.எல்.ஏ,தலைமை!

கடலூர், நவ. 26 -

மாநிலஉரிமைமீட்புக்கான இளைஞர்அணிஇரண்டாவது மாநில மாநாடு டிசம்பர் 17 சேலத்தில்நடைபெறஉள்ளதையொட்டி, கலைஞர் மண்டல இருசக்கர வாகன பிரசார பேரணிநெய்வேலிசட்டமன்ற தொகுதிதொகுதிகாட்டுக்கூடலூர் ஊராட்சிக்கு வந்தடைந்தது.தி.மு.க.இளைஞரணிஇருசக்கர வாகன பிரசார பேரணிக்கு,

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இ ராஜேந்திரன் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.தொழிலாளர்நலன்,திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன்,கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இதில் ஏராளமான கழகத்தினர்,இளைஞரணிநிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர். இருசக்கரவாகனபிரசாரபேரணியின் போது, பொது மக்களிடம் நீட் தேர்வுக்கு எதிரானகையெழுத்துக்களைபெற்றுகொண்டனர்.

இதனை தொடர்ந்து திமுக நிர்வாகிகள் பேரணியில் வந்தவர்களுக்குசால்வைஅணிவித்து உற்சாகவரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து பேரணி காட்டுக்கூடலூரில் இருந்து முத்தாண்டி குப்பம், கொள்ளுகாரன் குட்டை, சத்திரம், வெங்கடாம் பேட்டை, கீழூர், வடக்குத்து என்எல்சி நுழைவு வாயில் வழியாக நெய்வேலி நகரத்தை சென்றடைந்தது.

நெய்வேலி தொ.மு.ச, சதுக்கத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர்கலைஞர்அவர்கள்திருஉருவசிலைக்குஅமைச்சர்சி.வெ.கணேசன்,சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., மற்றும் கழகத்தினர்மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா.பாலமுருகன், மாவட் டப் பொருளாளர்ஜி.தண்டபாணி, பண்ருட்டி ஒன்றிய அவைத்தலைவர்ராஜா,ஒன்றியசெயலாளர்குணசேகரன்,அவைத்தலைவர் வீர இராமச்சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார்,சுற்றுப்பயண பொறுப்பாளர்கள், க.முத்துக்குமார், ரூபன், உதயநிதி,நெய்வேலிநகரச்செயலாளர்பக்கிரிசாமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

"நிறுவனங்களின் நாயகர் – கலைஞர்"

# சிறப்பு புகைப்படக் கண்காட்சி 3 நாட்கள் நடைபெறும்!

### தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிவிப்பு

சென்னை கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "நிறுவனங்களின் நாயகர் - கலைஞர்" சிறப்பு புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டு நேற்று (25.11.2023) தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு பொருளாதாரத்தில் முன்னணி மாநிலமாக திகழ பல்வேறு நிறுவனங்களைத் தொடங்கி, சிறப்பாக நடைபெற காரணமாக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை அறிந்து கொள்ள உதவும் இந்த புகைப்படக் கண்காட்சியை பொது மக்கள் பார்வையிடும் வகையில் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் என தலைமைச் செயலாளர் சிவதாஸ்மீனா அறிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.39 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்!

புதுக்கோட்டை நவ.26-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தொழுவங்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.28.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தினையும் மற்றும் தொழுவங்காடு ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 24.11.2023 அன்று திறந்து வைத்தார். பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதி, மின் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், தொழுவங்காடு ஊராட்சியில், ரூ.28.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தினையும், ரூ.10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும் திறந்து வைக்கப்பட்டது. அதன்படி இந்த புதிய இரண்டு வகுப்பறை கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை உயரும். மேலும் இக்கட்டிடத்தில் கல்வி சார்ந்த வரைபடங்கள், காற்றோட்ட வசதியுடன் சிறப்புடன் கட்டப்பட்டுள்ளது. இதனை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து, புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம் திறந்து வைத்ததன் மூலம் இப்பகுதிகளில் உள்ள குழந்தைகள் இக்கட்டிடத்தில் கல்வி பயில ஏதுவாக அமையும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும்.

இதுபோன்ற கல்வி சார்ந்த திட்டங்களை மாணவ, மாணவிகள், குழந்தைகள் அனைவரும் உரிய முறையில் பெற்று கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் தமகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், வட்டாட்சியர் சபருல்லா, ஊராட்சிமன்றத் தலைவர் சுமதி சுரேஷ், உதவிப் பொறியாளர் தமிழ்மணி, ஒன்றியக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# இராயபுரம் 48வது வட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்பு!

### வட்டச் செயலாளர் இரா.பாலன் வேண்டுகோள்

சென்னை, நவ.26-

இராயபுரம் 48வது வட்டச் செயலாளர்இரா.பாலன்விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இராயபுரம் 48வது வட்டத்தில்வாக்காளர்சேர்ப்பு,நீக்கம், பெயர்,பிழைதிருத்தம்,முகவரி மாற்றம் செய்ய சிறப்பு முகாம் இன்று (26.11.2023-ஞாயிற்றுக் கிழமை) அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் நமது 48வது வட்டத்தில்உள்ளவட்டக்கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பங்கேற்றுவாக்காளர்சேர்த்தல் பெயர் நீக்கம், முகவரி மாற்றம் ஆகிய பணிகளில் ஈடுபடுமாறு வட்டச் செயலாளர் இரா.பாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சங்கராபுரம் அ.ஆசிம்

நவம்பர் 26 (2019)

இளம் வயதிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பேரூர்ச் செயலாளராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1966, 86 ஆகிய இரண்டு முறை சங்கராபுரம் பேரூராட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.